செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 403 நாள்: 11/7/17

भारतीय डाक India Post

# இந்திய அஞ்சல் துறை,

## அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், வேலூர் கோட்டம், வேலூர் - 632 001.

அஞ்சல் தலை சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில் கடிதம் எழுதும் போட்டி வருகிற ஆகஸ்டு 15 - ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் மாணவர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்களும் கலந்து கொள்ளலாம். போட்டியின் தலைப்பு,

**" அன்புள்ள பாபு(மகாத்மா காந்தி) நீங்கள் எனக்கு ஊக்கம் தருகிறீர்கள்"**

**"DEAR BAPU (MAHATMA GANDHI), YOU INSPIRE ME"**

தமிழ் (அல்லது) ஆங்கிலம் (அல்லது) இந்தி மொழிகளில் எழுதலாம். போட்டியாளருக்கு வேலூர் தலைமை அஞ்சலகத்தில் இன்லேண்ட் லெட்டர் மற்றும் என்வலப் கவர் வழங்கப்படும். கடிதம் ஒரு வெள்ளைத்தாளில் (A4 Size paper) 1000 வார்த்தைகளுக்கு மிகாமலும் இன்லேண்ட் லெட்டர் கார்டில் 500 வார்த்தைகளுக்கு மிகாமலும் இருக்கவேண்டும்.

தேசிய அளவில் முதல்3 கடிதங்களுக்கு தலா ரூ.50 ஆயிரம், ரூ.25 ஆயிரம்,ரூ. 10ஆயிரம் பரிசுகள், பட்டங்கள் அக்டோபர் 2-ஆம் தேதி சபர்மதி ஆசிரமத்தில் வழங்கப்படும்.

தமிழ்நாடு அஞ்சல் வட்ட அளவில் சிறந்த முதல் 3 கடிதங்களுக்கு தலா ரூ.25ஆயிரம், ரூ.10 ஆயிரம், ரூ.5 ஆயிரம், பரிசுகள் வழங்கப்பட உள்ளது. சிறந்த கடிதங்கள் கடிதக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும்.

போட்டியில் கலந்து கொள்ளவிரும்புவர்கள் அருகில் உள்ள அஞ்சலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

கோட்டக்கண்காணிப்பாளர்,
வேலூர் கோட்டம், வேலூர் - 632 001.

செ.ம.தொ.அ. வேலூர்- 9. 11/7/17

மேலும் விவரங்களுக்கு:
0416-2220350,
2232549